கண்ணங்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திருமதி பாண்டிமீனாள் பாலுச்சாமி

நாள்: 17.02.2021

பொருள்: மனைப்பிரிவு அனுமதி - சிவகங்கை மாவட்டம் - தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம் - கண்ணங்கோட்டை ஊராட்சி - கண்ணங்கோட்டை குரூப் சர்வே எண்:193/16 -ல் 5503.70 ச.மீ (1.36 ஏக்கர்) பரப்பளவு கொண்ட மனைகள் எண்ணிக்கை 26-க்கு வரன்முறைப் படுத்துதல் திருமதி A.ஆனந்தி என்பவருக்கு உத்தரவிடுதல்

பார்வை:

1. அரசாணை எண்: 18 வீட்டுவசதி மற்றும் நகர் புற வளர்ச்சி துறை நாள்: 04.02.2019
2. நகர் ஊரமைப்பு இயக்குனர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்:4367/2019 - BA-2 நாள்: 06.11.2016
3. நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குனர், சிவகங்கை அவர்களின் கடிதம் ந.க.எண்:1040/2020 சிமா-2 நாள்: 05.01.2021
4. மனுதாரர் கூர்ந்தாய்வு கட்டணம் இவ்வலுவலகத்தில் சமர்பித்த நாள்:11.02.2021 மற்றும் சந்தை மதிப்பு கட்டணம் செலுத்தி இவ்வலுவலகத்தில் சமர்பித்த நாள்:17.02.2021
5. தான பத்திர ஆவண எண்: 5029/2020, நாள்:29.12.2020
6. அரசாணை எண்:79, வீட்டுவசதி மற்றும் நகர் புற வளர்ச்சி துறை நாள்: 04.05.2017
7. நகர் ஊரமைப்பு இயக்குனர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:19799/2020 போ நாள்: 24.12.2020

****

ஆணை:

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம், கண்ணங்கோட்டை ஊராட்சி, கண்ணங்கோட்டை குரூப் சர்வே எண்:193/16 -ல் 5503.70 ச.மீ (1.36 ஏக்கர்) பரப்பளவு கொண்ட மனைகள் எண்ணிக்கை 26-க்கு வரன்முறைப்படுத்திட தொழில்நுட்ப ஒப்புதல் கடிதம் பார்வை 3-ல் கண்டபடி வரப்பட்டுள்ளது. இவற்றில் மனைகள் 26-க்கு பார்வை

4-ன்படி கூர்ந்தாய்வு கட்டணம் ரூ. 1000/- நாள்:11.02.2021ன் படியும், ம் நில உபயோக சந்தை மதிப்பு கட்டணம் 3% ரூ.13702/- 17.02.2021-ம் தேதியன்று செலுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட விபரப்படி தொகைகள் செலுத்தியுள்ளதின் அடிப்படையில் சர்வே எண்:193/16 -ல் 5503.70 ச.மீ (1.36 ஏக்கர்) பரப்பளவு கொண்ட மனைகள் எண்ணிக்கை 26-க்கு மட்டும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. மனைப்பிரிவின் ஊடாக, உயர்அழுத்த மின்கோபுர பாதை செல்லுமாயின் அம்மனை வரன்முறை படுத்த இயலாது.
2. மனைப்பிரிவின் மீது நீதிமன்ற வழக்கோ, பிரச்சனைகள் ஏதும் இருப்பின் கண்டறியப்பட்டால் உத்தரவு ரத்து செய்யப்படும்.
3. மனையின் ஊடாக குறைந்த அழுத்த மின் கம்பிப்பாதை செல்லுமாயின், அதன் போக்கை சாலைப்போக்கில் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.
4. மனையின் ஊடே போக்கு கால்வாய் செல்லுமாயின் அதற்கு இடையூறின்றி அமைக்கப்பட வேண்டும்.
5. மனைப்பிரிவின் அருகில் நீர்நிலைகள் அமையுமாயின்கட்டிடத்தில் இருந்து வெளிவரும் கழிவுநீர், நீர்நிலைகளில் கலக்காத வண்ணம் உறுதி செய்யப்பட வேண்டும.
6. இந்த மனைப்பிரிவில் தார்சாலை வசதிகள், சாலைகளின் இருபக்கங்களிலும் வடிகால், துப்புரவு வசதி தேவையான பாலங்கள் மற்றும் தெருமின் விளக்குகள் ஏற்படுத்திய பிறகு, ஊராட்சி மன்றத்தில் ஒப்புதல் பெற்று தான் மனைகள் விற்பனை செய்யப்படவேண்டும். அதுவரைக்கும் மனைகள் ஏதும் விற்பனை செய்யவோ அல்லது வேறு பயன்பாட்டிற்கு இயலாது.
7. இந்த மனைப்பிரிவுக்கு அரசு விதிமுறைகளுக்குட்பட்டு ஏதும் குறைகள் கண்டறியப்பட்டால் இந்த உத்தரவினை ரத்து செய்ய எந்த காலகட்டத்திலும் ஊராட்சி மன்றத் தலைவருக்கு முழு அதிகாரம் உண்டு.

B. பாண்டியன்

தலைவர்,
கண்ணங்கோட்டை ஊராட்சி.

பெருநர்:

திருமதி A.ஆனந்தி,
க/பெ. அழகு,
350, முத்துராஜ் நகர்,
திருப்பத்தூர் ரோடு,
தேவகோட்டை,
சிவகங்கை மாவட்டம் - 630 303.